
# நீடித்து நிலைத்திருக்கும் உறுதிப்பாடு

## ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2023

இலங்கை மத்திய வங்கி

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் | 2024 மே 7




## இலங்கை மத்திய வங்கிச் சட்டம் 2023 செத்தெம்பரில் இயற்றப்பட்டது

**மத்திய வங்கியின் சுயாதீனம்** மற்றும் **பொறுப்புக்கூறும் தன்மை** என்பவற்றினை மேம்படுத்தும் விதத்திலான குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்றினை இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கம் குறித்துக்காட்டியது.

## 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் *பிரிவு 80(3)*

மத்திய வங்கியானது ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னரான **நான்கு மாத காலப்பகுதியினுள் அதன் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமை என்பவற்றினை வலியுறுத்தி,** அத்தகைய நிதியாண்டின் போது **பொருளாதாரத்தின் நிலைமை பற்றி** ஆளும் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட **அறிக்கையொன்றினை வெளியிட்டு அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனை** மத்திய வங்கியின் ஆளுநர் நிச்சயப்படுத்தல் வேண்டும்.

# 2023ஆம் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு பின்வருவனவற்றினை உள்ளடக்கின்றது...

முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

முக்கிய சமூகக் குறிகாட்டிகள்

சுருக்க அறிக்கை

அத்தியாயங்கள்

1: பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் நிதியியல் முறைமையின் நிலைமைகள்

2: மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு

3: பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு

மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது மத்திய வங்கியுடன் தொடர்புடைய முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்


சிறப்புக் குறிப்புகள் (7)

புள்ளிவிபரப் பின்னிணைப்பு (20)

[142 பின்னிணைப்பு அட்டவணைகள் எக்சல் வடிவத்தில் இணையத்தளத்தில் கிடைப்பனவாகக் காணப்படுமென்பதுடன் இணையத்தள வடிவத்தில் உள்ள அனைத்து அட்டவணைகளும் மேலதிக வரலாற்று ரீதியான தரவுகளைக் கொண்டிருக்கும்]

சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பு (9)


[11 அட்டவணைகள் எக்சல் வடிவத்தில் இணையத்தளத்தில் கிடைப்பனவாகக் காணப்படுமென்பதுடன் இணையத்தள வடிவத்தில் உள்ள அனைத்து அட்டவணைகளும் மேலதிக வரலாற்று ரீதியான தரவுகளைக் கொண்டிருக்கும்]




**மத்திய வங்கியின் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் மத்திய வங்கிக் கொள்கைகளின் மதிப்பீடு மற்றும் 2023 காலப்பகுதியில் நிதியியல் முறைமையின் நிலைமை என்பவற்றினை ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு உள்ளடக்கின்றது.**




**மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தனியானதொரு வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன**





# பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், நிதியியல் முறைமையின் நிலைமைகள் மற்றும் மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு

# அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்க்கமான கொள்கைச் சீராக்கங்கள் மற்றும் கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பன பொருளாதார உறுதிப்பாட்டினை பெருமளவில் மீட்டெடுக்க உதவிபுரிந்துள்ளன.

- விரைவான பணவீக்க வீழ்ச்சிப் பாதையுடன் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டது
- செலாவணி வீத உறுதிப்பாடு வலுப்படுத்தப்பட்டது
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்ததுடன் அதன்மூலம் மிகவும் அவசியமாகக் காணப்பட்ட வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டன
- நிதியியல் துறையானது நெருக்கடியினை எதிர்கொள்வதற்கான உயர்ந்தளவிலான தயார்நிலையுடன் அதன் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையினை எடுத்துக்காட்டியது
- இறைத் துறையானது குறிப்பிடத்தக்களவு சிறப்பாகச் செயற்பட்டது
- உறுதிப்பாட்டினை மீட்டெடுத்ததன் பயனாக பொருளாதாரமானது வளர்ச்சிப் பாதையை நோக்கி மாற்றமடையத் தொடங்கியது

# 2022 செத்தெம்பரில் வரலாற்றில் மிக உயர்ந்தளவிலான மட்டத்தினை அடைந்த பணவீக்கமானது அதன் பின்னர் விரைவான பணவீக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து, 2023 இறுதிப்பகுதியில் குறைந்த ஒற்றை இலக்க மட்டங்களை அடைந்தது…

**முதன்மைப் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு)**




**மையப் பணவீக்கமும் கணிசமானளவிலான பணவீக்க வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது**

**பின்வருவனவற்றினால் முக்கியமாக ஆதரவளிக்கப்பட்டு உள்நாட்டு விலை உறுதிப்பாடு மீட்டெடுக்கப்பட்டது**


- இறுக்கமான நாணய நிலைமைகளும் அதனுடன் இணைந்து இறுக்கமான இறை வழிமுறைகளும்
- உள்நாட்டு நிரம்பல் நிலைமைகளின் இயல்புநிலைக்குத் திரும்புதல்
- உலகளாவிய பண்ட விலைகள் குறைவடைந்தமை
- இலங்கை ரூபாவின் வலுவடைதல்

**பணவீக்க இலக்கு**

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினைத் தொடர்ந்து, ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கி கடுமுயற்சி செய்கின்றது

# விலை உறுதிப்பாடு மீட்டெடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து, நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2023இல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கைக்குப் படிப்படியாக மாற்றமடைந்தது...

## கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன...





**2023இல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்று பின்பற்றப்பட்டு பின்வருவனவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது**

- பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்க குறைவு மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள்
- மெதுவடைந்த உள்நாட்டுக் கேள்வி நிலைமைகளுக்கு மத்தியில் குறைந்தளவிலான பொருளாதார நடவடிக்கை
- வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் குறைவடைந்தமை

# 2022இல் பதிவுசெய்யப்பட்ட குறிப்படத்தக்க உயர்ந்த மட்டங்களிலிருந்து சந்தை வட்டி வீதங்கள் 2023இல் கணிசமான அளவினாள் வீழ்ச்சியடைந்தது...

## சந்தை வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி...






சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சியென்பது 2023 யூன் முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட தளர்ந்த நாணயக் கொள்கை வழிமுறைகளினால் முன்னெடுக்கப்பட்டது

**பரந்தளவிலான சந்தை கடன்வழங்கல் வீதங்களின் வீழ்ச்சி பின்வருவனவற்றினால் மேலும் ஆதரவளிக்கப்பட்டன**

- மிதமிஞ்சிய சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சியை இலக்கிட்ட நிர்வாக வழிமுறைகள் மற்றும் தார்மீக கடப்பாடு
- உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலுக்கு பின்னர் அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் காணப்பட்ட இடர்நேர்வு மிகையின் வீழ்ச்சி


# வங்கித்தொழில் முறைமையின் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்து என்பவற்றில் பதிவுசெய்யப்பட்ட விரிவாக்கங்களுக்கு மத்தியில் விரிந்த பண ($M_{2b}$) நிரம்பலின் வளர்ச்சி 2023 காலப்பகுதியில் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது...




- தனியார் துறைக்கான கொடுகடனில் நீண்ட காலமாகக் காணப்பட்ட மாதாந்த சுருக்கங்களை 2023 யூனில் பதிவுசெய்யப்பட்ட திரும்பலானது முடிவடையச்செய்தது.
- வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன் 2023இல் சுருக்கமடைந்தது
- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2023இல் தொடர்ந்தும் அதிகரித்தது
- மத்திய வங்கியின் மூலமான அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் 2023 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைப் (ரூ.1,056.3 பில்) பதிவுசெய்தது
- வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2023 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டன

# இலங்கைப் பொருளாதாரம் குறிப்பாக 2023இன் இரண்டாம் அரையாண்டில் மீட்சியடைவதற்கான சமிக்ஞைகளைக் காட்டியது...




மெதுவடைந்த வட்டி வீதங்கள் மற்றும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களின் தளர்வடைதல் என்பவற்றிற்கு மத்தியில் புதுப்பிக்கப்பட்ட பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினால் மீட்சி துணைபுரியப்பட்டது

## செலவினக் கண்ணோட்டத்தில், நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சியானது உள்நாட்டு மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி ஆகிய இரண்டினாலும் சாதகமாகப் பங்களிக்கப்பட்டது...

**2023இன் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் செலவின அணுகுமுறைக்கு அமைவாக:**

- **நுகர்வுச் செலவினம் 16.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு** விலைத் தாக்கத்தினால் தூண்டப்பட்டு, தனியார் மற்றும் அரச ஆகிய இரண்டினதும் நுகர்வுச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாயமைந்தது.
- ஆண்டு காலப்பகுதியில் **முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு** மத்தியில், கட்டடவாக்க நடவடிக்கைகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் தூண்டப்பட்டு நிலையான மூலதன உருவாக்கம் சுருக்கமடைந்தது.
- **தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது 51.9 சதவீதம் கொண்ட கணிசமானளவிலான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தமையானது** பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் காணப்பட்ட ஸ்தம்பித நிலையுடன் இணைந்து பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது.

| | 2023 |
|---|---|
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 23.8 |
| தேசிய சேமிப்புக்கள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக) | 27.2 |

# முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொழிலின்மை வீதமானது 2023இல் 4.7 சதவீதமாகத் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது...

அட்டவணை 1.6 குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு

| விடயம் | 2022 | 2023 (அ) |
|---|---|---|
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் (ஆ) | 17,162 | 17,306 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,547 | 8,408 |
| தொழிலுள்ளோர் | 8,148 | 8,010 |
| தொழிலற்றோர் | 399 | 398 |
| தொழிலின்மை வீதம் | 4.7 | 4.7 |
| ஆண் | 3.7 | 3.6 |
| பெண் | 6.5 | 7.0 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 49.8 | 48.6 |
| ஆண் | 70.5 | 68.6 |
| பெண் | 32.1 | 31.3 |


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது
(ஆ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை
(இ) குடும்ப அலகுகளின் குடித்தொகையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு


- ஆண்டு காலப்பகுதியில் **தொழிலற்ற குடித்தொகை மற்றும் தொழிற்படை ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின்** இணைந்த பெறுபேறாக 2023இல் தொழிலின்மை வீதம் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்பட்டது
- மேலும், முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 8.148 மில்லியனுடன் ஒப்பிடுகையில் **தொழிலுள்ளோர் குடித்தொகையும்** 2023இல் 8.010 மில்லியனிற்குக் **குறைவடைந்தது**
- **வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான** நாட்டிலிருந்தான புறப்படுகைகள் **தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்ட** போதிலும் 2022 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன

# வெளிநாட்டுத் துறையானது 2023இல் பல்வேறு முனைகளிலும் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது…

## நடைமுறைக் கணக்கு நிலுவை




## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்




- குறைந்தளவிலான வர்த்தகப் பற்றாக்குறை
- சுற்றுலாத் துறையிலிருந்தான உயர்ந்தளவிலான வருவாய்கள் மற்றும்
- தொழிலாளர் பணவனுப்பல்கள்

**என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு நடைமுறைக் கணக்கு 2023இல் மிகையொன்றினைப் பதிவுசெய்தது**


- மத்திய வங்கியின் மூலமான தேறிய வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள்
- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிதியங்கள் மற்றும்
- உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிடல்

**என்பன காரணமாக 2023 இறுதியளவில் ஒதுக்குகள் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகக் காணப்பட்டன**

**வெளிநாட்டுத் துறையில் ஏற்பட்ட பாரியளவிலான உறுதிப்பாட்டினைத் தொடர்ந்து, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள் என்பவற்றினை மத்திய வங்கியும் அரசாங்கமும் 2023இல் படிப்படியாகத் தளர்த்தின**

# இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைவு காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது...

## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு





**ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 9.1 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) ஐ.அ.டொலர் 11,911 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன**

உயர்ந்தளவிலான வாழ்க்கைச் செலவு மற்றும் முக்கிய ஏற்றுமதி நாடுகளின் பொருளாதாரச் சரிவு மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றினால் **ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது** செல்வாக்குச் செலுத்தப்பட்டது.


**2010இல் இருந்தான மிகவும் தாழ்ந்தளவிலான மட்டத்திற்கு வர்த்தகப் பற்றாக்குறையானது 2023இல் சுருக்கமடைந்தது.**

## நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை




**2023இல் காணப்பட்ட தாழ்ந்தளவிலான மொத்த வர்த்தகத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் அநேகமான முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான இருபுடை வர்த்தகம் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது**

## இறக்குமதிகளின் உள்ளமைப்பு





**இறக்குமதிச் செலவினம் 8.1 சதவீதத்தினால் (ஆண்டிற்காண்டு) ஐ.அ.டொலர் 16,811 மில்லியனிற்குக் குறைவடைந்தது**

**இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு** அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள், மெதுவடைந்த பொருளாதார நடவடிக்கை மற்றும் இறுக்கமான நாணய மற்றும் இறைக் கொள்கைகள் என்பன காரணமாயமைந்தன.

# சந்தையினை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையொன்றின் கீழ் இலங்கை ரூபா 2023இல் சடுதியாக உயர்வடைந்து காணப்பட்டது...


## செலாவணி வீதம்





## கொள்கை வழிமுறைகள்

- புதிதாக சட்டமாக்கப்பட்ட **2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டமானது** நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் **நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினை** நடைமுறைப்படுத்துவதனை தேவைப்படுத்துகின்றது
- 2023இல் செலாவணி வீதத்தில் **நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினை** மத்திய வங்கி பின்பற்றியது
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் படிப்படியான நீக்கம்

# சவால்கள் நிறைந்த நிலைமைகளுக்கு மத்தியில் ஒட்டுமொத்த நிதியியல் துறை உறுதிப்பாடு பேணப்பட்டது...



# நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள்...



- மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாகக் குறித்துரைக்கப்பட்டது

- “உரிமம்பெற்ற வங்கிகளின் தற்றுணிபுக் கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பில்” வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் அறிமுகப்படுத்தப்பட்டன

- பல்வேறு நுண்பாக முன்மதியுடைய வழிமுறைகளும் வங்கிகளின் திரவத்தன்மை நிலைமைகளுடன் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதனை நோக்காகக் கொண்டிருந்தன.

- உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் ஏற்கனவேயுள்ள ஒப்புதல் செய்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக பங்கிலாபங்கள்/ இலாபங்களைத் திருப்பியனுப்புதல் பற்றிய வெளிப்படுத்துகை மீதான வழிகாட்டலொன்று வெளியிடப்பட்டது.

- வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் திரட்சிப்படுத்தலுக்கான முதன்மைத் திட்டம் நடுத்தர காலப்பகுதியில் வலுவான, இயக்கவாற்றல் மிக்க மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடிய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை உருவாக்குவதற்குத் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

- சவால்மிக்க பேரண்டப்பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளையும் தனிப்பட்டவர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் வங்கித்தொழில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறைகள் சலுகை வழிமுறைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.


- இலத்திரனியல் கொடுப்பனவுகளை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன

- நிதியியல் பணி வழங்குவோருக்காக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பிலான ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.


- மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களின் தீர்மான அதிகாரசபையாகக் குறித்துரைக்கப்பட்டது.

# கடுமையான திரட்சிப்படுத்தல் வழிமுறைகளினால் தூண்டப்பட்டு, 2023இல் சிறந்த இறைச் செயலாற்றமானது முக்கிய இறை மீதிகளை மேம்படுத்தியது...


## அரசிறை




## அரச செலவினம்




## முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக)




*இறை மீதியானது வட்டிச் செலவினத்தைக் கழித்த ஆரம்ப மீதிக்குச் சமனாகும்

- வரிச் சீர்திருத்தங்கள் அரசிறையை அதிகரித்தன
- அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில் சிக்கனப்படுத்தல் வழிமுறைகள் செலவினங்களை ஓரளவு கட்டுப்படுத்துவதனை இயலச்செய்தன
- இறைத் திரட்சி வழிமுறைகள் இறை மீதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்றிற்கு வழிவகுத்தன
- 5 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரம்ப மிகையொன்று 1950இல் இருந்து ஆறாவது தடவையாகப் பதிவு செய்யப்பட்டது


*மூலங்கள்:* நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

# 2023இல், மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக மத்திய அரச படுகடன் வீழ்ச்சியடைந்த வேளையில் உள்நாட்டுப் படுகடன் கொடுப்பனவுகள் அதிகரித்தன...


பிரதானமாக **பெயரளவு மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி** மற்றும் **வெளிநாட்டுப் படுகடன் மீதான நாணயப் பெறுமான உயர்வின்** தாக்கம் என்பவற்றின் காரணமாக **மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக மத்திய அரச படுகடன்** வீழ்ச்சியடைந்தது


அதிகரித்த **உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளினால் மொத்தப் படுகடன் கொடுப்பனவுகள்** 2023இல் **அதிகரித்தன**

**மத்திய அரசின் வெளிநின்ற படுகடன் ((மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக)**




**மத்திய அரசின் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமொன்றாக)**







# பேரண்டப்பொருளாதாரத் தோற்றப்பாடு

# இடைக்கிடையேயான தளம்பல்களிற்கு மத்தியில், பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தினை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது…

**முதன்மைப் பணவீக்க எறிவுகள் கொ.நு.வி.சுட்டெண் (காலாண்டுச் சராசரி, ஆண்டிற்காண்டு, %)**




## மேல்நோக்கிய இடர்நேர்வுகள்

- உலகளாவிய ரீதியான உணவு மற்றும் வலு விலைகள் மீதான மேல்நோக்கிய அழுத்தங்கள்
- பாதகமான வானிலைத் தாக்கம்
- மின்சார கட்டணங்களுக்கான மேல்நோக்கிய திருத்தங்கள்

## கீழ்நோக்கிய இடர்நேர்வுகள்

- நிரம்பல் நிலைமைகளின் விரைவான மீட்சி
- மக்களின் குறைவடைந்த கொள்வனவுச் சக்தி

முதன்மைப் பணவீக்கத்தினைப் போன்று மையப் பணவீக்கமும் நடுத்தர காலத்தில் 5 சதவீதத்தினை அண்மித்து உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது

# அண்மைக்கால பேரண்டபொருளாதார எறிவுகள்

| குறிகாட்டி | அலகு | 2022 | 2023 | எறிவுகள் 2024 |
|---|---|---|---|---|
| உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி | % | -7.3 | -2.3 | 3.0 |
| வர்த்தக மீதி | மொ.உ.உற்பத்தியின் % | -6.7 | -5.8 | -7.8 |
| வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உற்பத்தியின் % | -1.9 | 1.8 | 0.5 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 1.2 | 3.1 | 3.4 |
| முதலாந்தர கணக்கு மீதி | மொ.உ.உற்பத்தியின் % | -3.7 | 0.6 | 0.8 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உற்பத்தியின் % | -10.2 | -8.3 | -7.3 |
| தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி | % | 6.2 | -0.6 | 8.5 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் | % | 46.4 | 17.4 | 5.0 |

# நாணய மற்றும் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாடு…

**நாணய**

- நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்ந்தும் தளர்வாகக் காணப்படும்
- சந்தை வட்டி வீதங்கள் மேலும் இயல்புநிலைக்குத் திரும்பும்
- வங்கித்தொழில் துறையின் மூலமான தனியார் துறைக்கான கொடுகடனில் விரிவாக்க உத்வேகமொன்று தொடரும்
- அரச துறைக்கான வங்கித்தொழில் துறையின் வெளிப்படுத்துகை தாழ்ந்தளவிலானதாகக் காணப்படும்
- வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மேம்படும்
- $M_{2b}$ வளர்ச்சி ஏறத்தாழ 15.0 சதவீதத்திற்குத் துரிதமடையும்

**வெளிநாட்டு**

- அதிகரித்த இறக்குமதிக் கேள்வி மற்றும் மிதமான ஏற்றுமதி வளர்ச்சி என்பவற்றுடன் வர்த்தகப் பற்றாக்குறை 2024இல் விரிவடையும்
- சுற்றுலாத்துறை மற்றும் ஏனைய பணிகள் ஏற்றுமதிகளில் எதிர்வுகூறப்பட்ட வளர்ச்சியுடன் பணிகள் கணக்கு மிகை அதிகரிக்கும்
- முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை 2024இல் சுருக்கமடைந்து அதனைத்தொடர்ந்து விரிவடையும்
- தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படும்
- நேர்கணியமான முதலீட்டாளர் மனோபாவங்கள், பல்புடை நிதியிடல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பவற்றினால் நிதியியல் கணக்கு உட்பாய்ச்சல்கள் ஆதரவளிக்கப்படும்
- சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட செலாவணி வீதம் மற்றும் அதிகரித்த ஒதுக்குகள்

# நிதியியல் மற்றும் இறைத் துறைத் தோற்றப்பாடு...

**நிதியியல்**

- நிதியியல் துறையின் தாங்கியிருக்கும் தன்மை மேம்படும்
  - *எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் வளர்ச்சி, வர்த்தகத்துடன் தொடர்புடைய கட்டுப்பாடுகள் தளர்வடைதல் மற்றும் மேம்பட்டுவருகின்ற மீள்கொடுப்பனவு இயலாற்றல் என்பவற்றுடன் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் தரம் மேம்படும்*
- அமைப்பியல், சட்டம் மற்றும் கொள்கை மட்டத்திலான சீர்திருத்தங்கள் மற்றும் புத்தாக்கங்கள் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்குத் திரட்டப்படும்
- சிறப்பாக வரிசைப்படுத்தப்பட்ட நிலையான கொள்கைகள் பயன்படுத்தப்படும்
  - *பன்னாட்டு நாணய நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டுடன் இணைந்து நிதியியல் துறையின் குறைபாடுகளும் நலிவுற்ற தன்மைகளும் நிவர்த்தி செய்யப்படும்*

**இறை**

- அரசிறை நிர்வாக வழிமுறைகள் வலுப்படுத்தப்படும்
- சிக்கல்தன்மை வாய்ந்த துறைகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட செலவிடல் ஒதுக்கீடுகளுடன் செலவினம் முகாமைத்துவம் செய்யப்படும்
- பொது நிதியியல் முகாமைத்துவம் மற்றும் கொள்வனவுடன் தொடர்புடைய புதிய சட்டவாக்கம் நடைமுறைப்படுத்தப்படும்
- தனியானதொரு பொதுப் படுகடன் முகாமைத்துவக் காரியாலயம் தாபிக்கப்படும்
- நிலைபெறதக்க படுகடன் உத்வேகமொன்றினை நோக்காகக் கொண்டு படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறை முன்னேற்றமடையும்
- அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில் முயற்சிகளின் நீண்டகால பிரச்சனைகள் மற்றும் ஏனைய ஊழல் மற்றும் வெளிப்படைத்தன்மை பாதிக்கப்படக்கூடிய தன்மைகள் நிவர்த்தி செய்யப்படும்

# சிறப்புக் குறிப்புகளின் பட்டியல்...

1. நாணயக் கொள்கை மீதான நிரம்பல் பக்க பணவீக்கத்தின் தாக்கங்கள்
2. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் முன்னேற்றம் தொடர்பிலானதோர் இற்றைப்படுத்தல்
3. நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார மீட்சியை ஆதரவளிக்கும் முகமாக உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபாரப் புத்துயிரளித்தல் பிரிவுகளை நிறுவுதல்
4. சந்தை நடத்தைக்கான மேற்பார்வை: நிதியியல் முறைமையில் நம்பிக்கையை நிலைநிறுத்தல்
5. இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) : நிதியியல் ரீதியிலான அறிவூட்டுதலை நோக்கி
6. இலங்கை பற்றிய பரஸ்பர மதிப்பீடு 2025: அதன் தேசிய முக்கியத்துவம்
7. இலங்கையின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு வெளியீடுகளை மேலும் நிலைபெறத்தக்கதாக்குதல்

# முடிவுரை…

- இலங்கையின் பொருளாதாரம் அதனுடைய சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் ஆழமான பொருளாதாரச் சரிவிலிருந்து படிப்படியான மீட்சியொன்றை 2023இல் எடுத்துக்காட்டியது
- பணவீக்கமானது 2022இல் பதிவுசெய்யப்பட்ட அதனுடைய உயர்ந்தளவிலான மட்டத்திலிருந்து 2023இன் இறுதியளவில் ஒற்றை இலக்க மட்டங்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது
- 2023 யூன் தொடக்கம் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றிற்கான நகர்வுடன் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன
- செலாவணி வீதத்தினைத் தீர்மானிப்பதில் பாரியளவான நெகிழ்ச்சித்தன்மை மற்றும் வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கட்டுப்பாடுகளின் படிப்படியான அகற்றல் என்பவற்றுடன் இணைந்து 2023இல் மற்றும் 2024இன் முற்பகுதியில் இலங்கை ரூபா வலுவடைந்தது
- நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகள் அதிகரிக்கும் விதத்தில் வெளிநாட்டுத் தாங்கிருப்புக்கள் 2023இல் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டன
- உள்நாட்டு நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கும் வகையில் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுடன் நிதியியல் துறையானது வழிகாட்டப்பட்டது
- அரசின் ஆரம்ப மீதி மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு என்பவற்றில் 2023இல் மிகைகள் பதிவுசெய்யப்பட்டன

# முடிவுரை…


- அனைத்துத் துறைகளிலும் பரந்த அடிப்படையிலான பொருளாதார விரிவாக்கமொன்று எதிர்பார்க்கப்படுகின்றது
- மத்திய வங்கியின் பாரியளவிலான சுயாதீனம் மற்றும் நாணய நிதியிடலிற்கான தடை என்பவற்றுடன் உள்நாட்டு விலை உறுதிப்பாடு பாதுகாக்கப்படும்
- வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு தக்கவைத்துக் கொள்ளப்படும்
- நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மேலும் மேம்படும்
- அரசாங்கம் அதன் இறைத் திரட்சி முயற்சிகளுடன் முன்னேற்றமடையும்

...இலங்கைப் பொருளாதாரத்தின் வலுவான மீட்சியானது இதுவரையிலான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட **சீராக்கங்களின் தொடர்ச்சியில்** தங்கியுள்ளதுடன் இச்செயன்முறையின் பகுதியொன்றாக **பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் வெற்றிகரமான தொடர்ச்சி** மற்றும் **படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் நிறைவும்** தொடர்ந்தும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றன...

**...நாடானது நெருக்கடியிலிருந்து முற்று முழுதாக வெளியேறாதுள்ளமையினால் செலவுகூடிய கொள்கைப் பரிசோதனைகள் உள்ளடங்கலாக அர்ப்பணிக்கப்பட்ட பாதையிலிருந்தான ஏதேனும் விலகல்களுக்கு இடமில்லை...**

...**வலுவான நிறுவன ரீதியிலான அமைப்பொன்றினதும் சட்டக் கட்டமைப்பொன்றினதும்** கட்டியெழுப்பலானது புதிய இயல்புநிலையை நோக்கிய பொருளாதார மாற்றத்திற்கு ஆதரவளிக்கின்ற வேளையில் பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடர்பிலான பரந்தளவிலான **அரசியல் மற்றும் சமூக இசைவானது** நீடித்து நிலைபெறத்தக்க வளர்ச்சியினூடாக பொதுமக்களின் நல மேம்படுத்துதலை மேம்படுத்தும் நோக்குடன் **கட்டமைப்புசார் தடைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கும் மீண்டெழும் கொள்கை மீள்திரும்பல்களையும் பொருளாதாரச் சரிவுகளையும் தவிர்ப்பதற்கும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது...**

...உள்நாட்டு விலை உறுதிப்பாடு, வெளிநாட்டுத் துறை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றினைப் பேணுவதுடன் அதன்மூலம், பொருளாதார உறுதிப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கும் நீடித்து நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது...




# நன்றி